5. அறிவிப்பு.

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த)ச் சட்ட முனவடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்ட வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ.) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த)ச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த)ச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.